# பிரெஞ் குழுவை ஹெலியிலிருந்து தாக்கியவர் மீது தனி நபர் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்?

வவுனியாவில் பிரெஞ் வைத்தியக் குழு மீது நடாத்தப்பட்ட ஹெலிகப்டர் தாக்குதல் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட அரச தனிநபர் ஆணைக்குழுவின் ஆணையாளராக உயர்நீதி மன்றத்தின் இளைப்பாறிய நீதியரசர் ஓசன் ஹெக்டர் டீ அல்விஸ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். எவ்வாறான சூழ்நிலையில் தாக்குதல் நடைபெற்றது எனவும், தாக்குதலுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம் எனவும் திரு. ஓசன் ஹெக்டர் டீ அல்விஸ் சிபார்சு செய்ய வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளார். கடந்த மூன்றாம் திகதி வவுனியா பாலம்பிட்டி இரணை இலுப்பைக்குளம் வீதியில் செஞ்சிலுவைக் கொடியுடன் சென்ற பிரெஞ் எம். எவ். எப் மருத்துவக்குழு வின் அம்புலன்ஸ் வாகனம் மீது விமானப்படை ஹெலிகப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியதில் பிரான்ஸ் பிரஜைகளான இரு தாதிகளும் டாக்டர் ஒருவரும் சாரதியும் காயமடைந்தமை தெரிந்ததே.


பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 164 பிரசோற்பத்தி சித்திரை 28 (11-05-1991) சனி


## மன்னாரிலும் ஊரடங்கு

மன்னார்த்தீவு உட்பட மன்னார் மாவட்டத்தில் நேற்றுக்காலை 6மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர், வவுனியா சிங்களப் பிரிவு, செட்டிக்குளம் வவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ★ தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தால் ஸ்ரீலங்கா - பிரெஞ் உறவு பாதிக்கும் என பிரான்ஸ் அரசு எச்சரிக்கை

தனது நாட்டுக்குச் சொந்தமான மருத்துவக்குழு மீது ஸ்ரீலங்கா படைகள் நடாத்திய தாக்குதல் குறித்து பிரெஞ் அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து ஸ்ரீலங்கா பிரான்ஸிடம் மன்னிப்புக் கோரியிருந்த போதிலும் இத்தகைய தாக்குதல் சம்பவம் தொடர்ந்தால் ஸ்ரீலங்காவுடனான தனது உறவைப் பரிசீலிக்க வேண்டியிருக்கும் என பிரெஞ் அரசு தனது

—04 ஆம் பக்கம் பார்க்க

## லொறி மீது குண்டு வீச்சு

மாங்குளத்தில் கடந்த புதன்கிழமை குண்டு வீச்சு விமானம் நடாத்திய தாக்குதலில் லொறி ஒன்று பலத்த சேதமடைந்தது.

வீதியில் சென்று கொண்டிருந்த இந்த லொறி மீது குண்டு வீசப்பட்ட போது அதன் சாரதியும் கிளீனரும் மயிரிழையில் தப்பினர் (38)

# வவுனியாவில் இரு முனையில் கடும் மோதல்கள்

## மாதர்பணிக்கர்மகிழங்குளத்தில் படையினர் நிலைகொண்டுள்ளனர்

வவுனியா மாவட்டத்தில் கோழியகுளம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் பூவரசங்குளத்தை நோக்கி முன்னேறிய போது இடையில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர். 30 நிமிடங்கள் நடந்த சண்டையின் பின்னர் இழப்புகளுடன் இராணுவத்தினர் பூவரசங்குளத்தை சென்றடைந்தனர்.

பின்பு பிற்பகல் 2.30மணியளவில் பவல், ட்ரக், டோசர் என்பவற்றின் உதவியுடன் பூவரசங்குளத்திலிருந்து பாலமோட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த போது மாதர்பணிக்கர்மகிழங்குளம் பாடசாலை அருகே விடுதலைப்புலிகள் ஆர். பி. ஜி தாக்குதலை நடாத்தினர்.

மூன்று மணிநேரம் நடந்த இச் சண்டையில் பவல் வாகனம் பலத்த சேதமடைந்தது பின்பு டோசர் மூலம் கோழியகுளத்திற்கு இந்த பவல்வண்டி படையினரால் இழுத்துச்செல்லப்பட்டது.

இத் தாக்குதலில் 4 படையி

—04 ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினை தீர்வு காணுமாறு கொரிய மாணவர்கள் மகஜர்

இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணுமாறு வலியுறுத்தி தென்கொரிய மாணவர்கள் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

தென்கொரிய யோங்நோம் பல்கலைக்கழக மாணவர்கள் சேர்ந்து கையெழுத்திட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரி இம் மகஜரை அனுப்பி வைத்துள்ளனர். (48)

## ஆறுகள், காடுகள் கடந்து யாழ் வரும் பயணிகள்!

யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் தவம்கிடக்கும் பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் காடுகளினூடாக, ஆறுகள் கடந்து வந்து சேர்கின்றனர்.

இவ்வாறு நேற்றுப்பகல் சுமார் பத்துப்பேர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வாகனங்கள் எதுவும் இல்லாததால் புதிய சைக்கிள்களை வாங்கி அங்கிருந்து பல சிரமங்களின் மத்தியில் வந்து சேர்ந்ததாக ஒருவர் தெரிவித்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தென்னிலங்கையில் கைதான மாணவர் விடுவிக்கப்படவில்லை

தென்னிலங்கையில் கைது செய்யப்பட்ட 125 பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என பல்கலைக்கழக மாணவ ஆணைக்குழு அரசுக்கு புகார் செய்துள்ளது

இம் மாணவர்கள் ஜே. வி. பியினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவர் எனவும் இதுவரை இவர்கள் நீதிமன்றம் எதிலும் ஆஜர் செய்யப்படவில்லை எனவும் புகார் செய்யப்பட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மடு முகாம் உணவு கையிருப்பு நான்கு நாள்களுக்கே போதுமானது

மடு அகதி முகாமில் அடுத்த புதன்கிழமை வரையுமே உணவுக் கையிருப்பு உள்ளதாக அகதி முகாம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றும், நாளையும் அகதிகளுக்கான ஐ. நா. சபைச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவு ஜனாதிபதி செல்வாக்கை காட்டும்

இன்று தென்னிலங்கையில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் 87 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

ஐ. தே. க. கட்சியை எதிர்த்து ஆறு எதிர்க்கட்சிகளும் போட்டியிடுகின்றன. தேர்தல் முடிவுகள் நாளை வெளியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல் ஜனாதிபதி பிரேமதாஸவின் தனிப்பட்ட செல்வாக்கை பரிசோதிக்கும் களமாகவே அமையும் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாம் தவணை இல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டம் நீண்ட நாள்களாக அமுலில் இருந்து வருவதினால் இரண்டாம் தவணைக்கென பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

கடந்த வாரம் நடைபெற்ற விமானத் தாக்குதலால் இப் பகுதியில் உள்ள சில பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

## உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனை நிலையம்

உள்ளூர்உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதற்காக கட்டைவேலி உடுப்பிட்டி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் 'பனையகம்' என்ற பெயரில் விற்பனை நிலையம் ஒன்றினை நெல்லியடியில் திறந்துள்ளது.

நெல்லியடி - கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள இவ் விற்பனை நிலையத்தில் புழுக்கொடியல், ஓலைத்தொப்பி, பனங்கட்டி, பனஞ்சாராயம், கற்பகப்பாண், பணில், பாய் வகைகள் உட்பட பல்வேறு பனை உற்பத்திப்பொருள்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## காங்கிரசுக்கே வெற்றி வாய்ப்பு லங்கா கார்டியன் கணிப்பு

இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளதாக லங்கா கார்டியன் சஞ்சிகை நடாத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு வடபகுதி பயணம் ஒரு வார காலமாக பாதிப்பு

வவுனியா - யாழ்ப்பாணம் போக்குவரத்துக்கள் கடந்த வியாழக்கிழமைமுதல் தடைப்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்து வந்த பயணிகள் பலர் வவுனியாவில் தரித்து நிற்கின்றனர்.

ஓமந்தைப் பகுதியில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை ஒருவாரமாகநடைபெற்று வருவதினால் வடக்கே

—04 ஆம் பக்கம் பார்க்க

# வாஞ்சையோடு வரவேற்கத்தக்க வாஞ்சிநாதன் கவிதைகள்

தமிழ்த்தாயப் பதிப்பகத்தின் மிகப் பிந்திய வெளியீடாக வந்திருப்பது 'தமிழரின் தாகம்' இதனை ஆக்கியவர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்கள். அவர் போராளி; போராளியே கவிஞனும் ஆகும்போது எவ்வித பாட்டுகள் பிறக்கும் என்பதற்கு உதாரணமாகவும் சாட்சியாகவும் இந்த ஆக்கம் விளங்குகிறது.

போர்க்களப் பாட்டுகள் தமிழ் இலக்கியத்துக்குப் புதியன அல்ல. சங்க காலத்தவை என்று போற்றப்படும் சான்றோர் செய்யுள்களிலே புறத்திணைப் பாடல்கள் கணிசமானவை. புறப்பாடல்களுள் மிகப் பல, போர் பற்றியனவே. ஆயினும் புறப்பாடல்களை இயற்றிய பழம் புலவர்கள் அனைவரும் போராளிகளோ என்பது ஐயத்துக்குரியது.

'திரிகடுகம்' என்னும் நீதி நூலைப் பாடியவர் நல்லாதனார் என்பவர். அவர் 'செரு அடு' நல்லாதனார் என்று சுட்டப்படுகிறார். ஆகையால் அவர் ஒரு வேளை போராளிப் புலவராய் இருந்திருக்கலாம். அவரைப் போலவே வேறு மறவர்கள் இரும் புலமை உடையவர்களாய் இருந்திருக்கக் கூடும். ஆயினும் போராளிகள் தாமே தம் போர்க்கள அநுபவங்களைப் பின்னணியாகக் கொண்டு பாடிய இலக்கியங்கள் பெருந்தொகையிலே தமிழில் உள்ளன என்று கூற முடியாது.

நவீன போர் முறைகள் தோன்றிய இன்றைய சகாப்தத்திலே போராளிக் கவிஞர்கள் என்று விதந்து பேசப்படும் ஒரு கூட்டத்தார் உலகெங்கும் தோன்றியுள்ளனர். இவர்களின் ஆக்கங்கள் 'போர்க் கவிதைகள்' என்று தனியாக எடுத்து நோக்கப்படுகின்றன. முதலாம், இரண்டாம் உலகப்போர்களில் பங்குபற்றிய போராளிகள் அவ்வித கவிதைகளை ஏராளமாக எழுதியுள்ளனர்.

ஆயினும் தமிழ் மொழியில் அவ்வித கவிதைகள் இல்லை என்றே சொல்லிவிடலாம். இருந்தாலும் ஈழத்தமிழகத்திலே விடுதலை இயக்கம் தலையெடுத்த பின்னர் ஆற்றல் வாய்ந்த போர்க் கவிதைகள் தமிழிலும் தோன்றத் தொடங்கியுள்ளன. இந்தப் புதிய போக்கிற்கு ஒரு முன்னறிவிப்புப் போல அமைகிறது 'தமிழரின் தாகம்'.

'தமிழரின் தாகம்' ஆறு பகுதிகளாய் அமைகிறது. பகுதி ஒவ்வொன்றையும் பதிகம் என்று குறிப்பிடுகிறார். அவை திருக்கோணமலைப் பதிகம், மட்டக்களப்புப் பதிகம், வன்னிப் பதிகம், மன்னாரப் பதிகம், மலையகப் பதிகம், யாழ்ப்பாணப் பதிகம் என்பன. கவிஞரின் பார்வைக் களம் பரந்து விரிந்து விசாலமாக உள்ளமையை இந்தப் பதிகப் பெயர்களே நமக்கு உணர்த்தி வைத்து விடுகின்றன. கள அநுபவம் நேரடியாக இங்கு வெளிப்படுகின்றது என்று நாம் சொல்லலாம். ஒவ்வொரு பிரதேசத்துக்குரிய பிரத்தியேக மணங் கமழும் வகையிலே சொற்கோவைகள் அமைந்து கிடப்பதை நாம் ஆங்காங்கே அடையாளம் காணலாம்—

''கிளிவெட்டி கிண்ணியா கனித்தீவில்
கிட்டியடி கிளித்தட்டு விளையாட்டெல்லாம்
அழிபட்டு வெகு நாளாய் ஆகிப் போச்சு!
அங்கெல்லாம் அடக்குமுறை மீறிப் போச்சு''

இவை திருக்கோணமலைப் பதிகத்தில் வரும் வரிகள்.

''ஏர் பூட்டி எருதுகளால் உழவடித்தே
ஏற்றமுடன் நெற்குவித்து எமக்குத் தந்த
சீர் பெற்ற உழவரினைச் சிறையில் பூட்டிச்
செய்கின்ற கொடுமைகளைத் தாங்கலாமோ?''

என்று மட்டற்ற சினங்கொண்டு சீறுகிறது மட்டக்களப்புப் பதிகம்.

இவ்வாறே ஏனைய நான்கு பதிகங்களும் தத்தமக்கு உரிய உரிய வகையிலே ஒவ்வொரு பிரதேசத்தின் இயல்பு நிலையை நினைவு கூர்வதுடன், இனவிரோத ஆக்கிரமிப்பினால் இன்று தோன்றியுள்ள இழிநிலையையும் எடுத்துப் பேசி மிடுக்குடன் கணை தொடுத்து நிற்கின்றன. அவை அனைத்தும் எரிகணைகள்; கடுமையான எறிகணைகள்!

கவிஞர் வாஞ்சிநாதனே ஓர் இடத்திற் குறிப்பிடுவது போல, ''புட்டிப் பால் உண்ணும் பச்சிளம் பாலகரும் / வெட்டுக்கிரையாகி வீழ்ந்தழியும் வேளை'' இது அந்தரிப்பும் அவலமும் நிரம்பிய இந்தப் பொழுது. ''பெருமையினை அழித்திடவே பேய்கள் சூழும் / பொழுது'' குருதி ஆறுகள் பாய்ந்தோடும் இந்தக் கொடிய தருணத்தின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுகள் கொண்ட இந்தப் புத்தகம் தமிழ் மக்களின் வாஞ்சையான வரவேற்புக்கு உரியது.

தமிழிலும் உண்மையுணர்வு ததும்பும் போர்க்கால இலக்கியங்கள் பல்கிப் பெருகும் ஒரு நிலைமைக்குக் கட்டியம் கூறுவது இந்தக் கவிதை நூல். கவிஞரின் கலையார்வமும் கொள்கை முன்னெடுப்பு ஊக்கமும் விதந்து கூறத்தக்கன.

— முருகையன்

## கடற்றொழிலாளி கரை திரும்பவில்லை

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி ஒருவர் கடந்த ஒருவார காலமாக வீடு திரும்பவில்லை.

நாகர்கோவிலைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பிச்சைமுத்து தெய்வேந்திரராசா (35 வயது) என்னும் குடும்பஸ்தரே காணாமற் போயுள்ள கடற்றொழிலாளியாவர். (43)

## இலவச ஆங்கில வகுப்பு

மாகியம்பதி சூரியோதய வாசிகசாலையில் இலவச ஆங்கிலக் கல்வி வகுப்புக்கள் சனி, செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

ஆண்டு 4 முதல் 6 வரை பயிலும் மாணவர்கள் இவ் இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளலாமென பொறுப்பாசிரியை யசோதராஜோசப் அறிவித்துள்ளார்.

# பட்டதாரி அனைவருக்கும் விரைவில் வேலைவாய்ப்பு!

## உயர்கல்வி அமைச்சில் பதியுமாறும் அறிவிப்பு

வேலையில்லாப் பட்டதாரிகளின் விவரங்களை உயர்கல்வி அமைச்சு தற்பொழுது சேகரித்து வருகின்றது.

இதன் பொருட்டு உயர்கல்வி அமைச்சில் பதிவு இடாப்பொன்று பேணப்பட்டு வருகின்றது. வேலையில்லாத எல்லாப் பட்டதாரிகளும் இந்த இடாப்பில தமது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

பெயர், முகவரி, பட்டம்பெற்ற வருடமும் பெற்றபட்டமும், பல்கலைக்கழகத்தின் பெயர், பட்டத்திற்கு எடுத்தபாடங்கள் போன்ற விவரங்களுடன் 18, உவோட் பிளேஸ், கொழும்பு-7 என்ற முகவரியிலுள்ள உயர்கல்வி அமைச்சரின் அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி பட்டதாரிகள் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக்களை வழங்கும்முகமாகவே இப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (74)

## இன்று இறுதி ஆட்டம்

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அதன் 10 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தும் மாவீரர் மேஜர் டயஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்துக் கிரிக்கட் போட்டியின் அரை இறுதி ஆட்டமும், இறுதி ஆட்டமும் இன்று 'பாங்குவ' விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அரை இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் வி. க. அணியை எதிர்த்து நெசதேன் வி. க. அணி ஆடும். இதில் வெற்றி பெறும் அணியை எதிர்த்து சென்றலையிற்ஸ் அணி இறுதி ஆட்டத்தில் ஆடும்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக சமாதான நீதவான் எம். ஜே. செபஸ்தியாம்பிள்ளை கலந்து கொள்வார்.

இப்போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கத்தின் அனுசரணையுடன் நிலையச் செயலாளர் சச்சிதவச்செல்வம் செய்து வருகிறார். (16)

## திறந்த பல்கலை. மாணவர் கூட்டம்

யாழ் திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் பட்டமேற் கல்வி டிப்ளோமா பயில கடந்த வருடம் பதிவு செய்து கொண்டவர்களுக்கான முதலாம் வருட ஆண்டு இறுதிப் பரீட்சை தொடர்பாக நாளை 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் பிராந்திய நிலையத்தில் முக்கிய கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறி தொடர்பானவர்கள் தவறாது சமூகம் கொடுக்கும்படி மாணவர் நலன்புரிச் சங்கம் கேட்டுள்ளது. (ப-7)

## நடமாடும் தேநீர்ச் சாலை

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் நடமாடும் தேநீர்ச் சாலை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. 17


## சிறு விளம்பரம்

### தேவை

சோடா, குளிர்பான உடன் தேவை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி அன்னபூரணம் இல்லம். 05052

### தேவை

சைவ உணவு தயாரிப்பதில் சிறந்த அநுபவம் உள்ள சமையற்காரர் உடன் தேவை நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் திறமைக்கேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி. 05041


## பெண் காவல்துறையினருக்கான விண்ணப்பம்

1. வயது எல்லை 18 வயது முதல் 25 வயது வரை
2. உயரம் 5 அடி 2 அங்குலம்
3. கல்வித்தகைமை எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரணம்) க. பொ. த. (உயர்தரம்) வரை

விண்ணப்பதாரிகள் 15. 05. 91 இற்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி யாழ் பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல் துறை
05059

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கனகாம்பிகை தங்கராசா

செந்தமிழ் நிலத்தில் 12. 08. 1930 — அந்தகன் நிலத்தில் 14. 04. 1991

திதி: பங்குனி அபரபக்கச் சதுர்த்தசி

குலத்தின் நிலைக்களமாய்க் குடும்பத்தின் ஒளிச் சுடராய்
பலத்தின் விளை நிலமாய்ப் பாசத்தின் உறைவிடமாய்
என்றென்று முடனிருந்தே எமதுயிருக்குயிராகி
நன்றுதினந் தினமாற்றி நமதுயிருக்குயிராகி
சென்று மறைந்திருந்தாலுஞ் சிந்தையுறு தெய்வம் நீ
கன்றுமன மனமிலாநம் கனகாம்பிகையம்மா!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 13. 05. 91 திங்கள் காலை சந்தை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை தீர்த்தத்திற் கரைக்கப்படும். இக் கிரியைகளின் போது சமுகந்தந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றாரையும், உறவினரையும், சுற்றத்தையும், சூழலையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
ச. தங்கராசா குடும்பத்தினரும் (பதிகர்)
05024

# சீனா-ஸ்ரீலங்கா உறவில் விரிசல்!

## கடனுக்கு உணவுப்பொருள்களை வழங்கவும் மறுப்பு!!

சீனாவுக்கும்- ஸ்ரீலங்காவுக்குமிடையேயான வர்த்தக உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் சீனாவிடமிருந்து அரிசி உட்பட பெருமளவு பொருள்களை இலங்கை நீண்டகால, குறுகியகால கடன் அடிப்படையில் பெற்று வந்தது.

ஆனால் சீனா தறபொழுது இலங்கைக்குக் கடனாக எந்தவிதபொருள்களையும் வழங்க முடியாது என அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதையும் சீனா தற்பொழுது நிறுத்தியுள்ளது.

இவ்விரு நாடுகளுக்குமிடையே வர்த்தகத்துறையில் ஏற்பட்டுள்ள திடீர் விரிசல் இரு அரசுகளுக்குமிடையே தோன்றும் கருத்துமோதல்களையே எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர். (74)

## மது மயக்கத்தில் 'மந்தி'
### மரத்திலேறியவர் மருத்துவ மனையில்

மதுபோதையில் இருந்த குரங்கு ஒன்று களேபரஞ் செய்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் பளையில் இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் கள் இறக்குவதற்காக மரத்தில் ஏறிய சமயம் மதுபோதையில் தள்ளாடி அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த இக்குரங்கு தொழிலாளியைப் பின் தொடர்ந்து மரத்திலேறி அவரைக் கடித்துக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடுங்காயங்களுக்கு உள்ளான இந்தத்தொழிலாளி தற்பொழுது மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே குரங்கு மதுபோதையில் வேறு பலரையும் கடித்துக் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## மேலதிக அரச அதிபர்களுக்கு
## 1000 ரூபா விசேடபடி கிடைக்கும்

கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரியும் மேலதிக அரசாங்க அதிபர்களுக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா படி வழங்கப்படவுள்ளது.

கஷ்டப் பகுதிகளிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களில் கடமை புரியும் பிரதேசச் செயலாளர்கள் மேலதிக அரசாங்க அதிபர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் இக்கொடுப்பனவு கிடைக்கும்.

தற்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் படிகளுக்கு மேலதிகமாகவே இந்த விசேட கஷ்டப்பிரதேசப் படி வழங்கப்படவுள்ளது.

## பதநீருக்கு மவுசு

அரியாலையில் உள்ள பனம் பொருள் அங்காடியில் பனம் பதநீருக்குப் பலத்த மவுசு ஏற்பட்டுள்ளது.

காலையிலேயே பதநீர் விற்று முடிந்து விடுகிறது. போத்தல் ஒன்று பத்து ரூபாவாக இங்கு பதநீர் விற்பனை செய்யப்படுகிறது. 17

## காஷ்மீரில் ஆற்றினுள் பஸ் மூழ்கி
## நாற்பதுக்கும் அதிகமானோர் பலி

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் நாற்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த பஸ் ஆற்றினுள் விழுந்து மூழ்கியபோதே இவர்கள் கொல்லப்பட்டனர்.

அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டமையே விபத்துக்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்று உள்ளூராட்சித் தேர்தல்
## முடிவுகளை அறிவிக்க இரவுவிசேட ஒலிபரப்பு

வடக்குகிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இன்று நடைபெறவுள்ளன.

17 மாவட்டங்களில் மொத்தம் 236 சபைகளுக்கும் நடைபெறவுள்ள இத் தேர்தலின் மூலம் 3000 உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படவுள்ளனர்.

இத்தேர்தலை அவதானிக்கவென அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 16 உறுப்பினர்கள் இலங்கை வந்துள்ளனர். இவர்கள் இன்று 16 மாவட்டங்களுக்கும் நேரில் விஜயம் செய்து தேர்தல் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்கவுள்ளனர். இந்த அறிக்கை பின்னர் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் முடிவுகள் நள்ளிரவு முதல் வெளிவரும். முடிவுகளை அறிவிக்கவென இன்று இரவு 10 மணிமுதல் நாளை காலை6 மணிவரை தமிழ்ச் சேவை ஒலிபரப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

## உதவி அரச அதிபர் பிரிவு தோறும்
## செஞ்சிலுவைக்கிளைகள் செயற்படும்

யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் யாழ் செஞ்சிலுவைச்சங்கத்தின் ஒவ்வொரு கிளை செயற்படவுள்ளது.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட புதிய தீர்மானம் ஒன்றிற்கமையவே இவ்வாறு அதன் கிளைகளை பன்முகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் அங்கத்தவர்களுக்கான கூட்டமொன்றும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## கரும்புலி கப்டன் மில்லர் நினைவாக
## நெல்லியடியில் உதைபந்தாட்டப் போட்டி

கரும்புலி கப்டன் மில்லர் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கமும், நெல்லியடி என்.சி.சி விளையாட்டுக் கழகமும் நடாத்தத் தீர்மானித்துள்ளன.

7 பேர் கொண்ட இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நொக்அவுட் முறையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் தமிழீழத்தின் எல்லாபாகங்களையும் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களும் பங்கு கொள்ளலாம்.

போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வெற்றிபெறும் முதல் மூன்று கழகங்களுக்கும் முறையே கரும்புலி கப்டன் மில்லர் ஞாபகார்த்தக் கேடயமும், மேஜர் கமல் ஞாபகார்த்தக் கேடயமும், வீரவேங்கை வின்சன் ஞாபகார்த்தக் கேடயமும் வழங்கப்படவுள்ளன. 39

## அழுகும் பிணங்களின் மத்தியில் வாழ்க்கை
## 80 லட்சம் பேருக்கு வயிற்றோட்டம்

பங்களாதேஷில் தொடர்ந்தும் விட்டு விட்டுச் சூறாவளி வீசுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மாலை அங்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் மற்றொரு புயல் வீசியதாக அறிவிக்கப்படுகின்றது.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் இதேவேளை கடும் மழையுடன் காற்று வீசியது. இதனால் மேலும் பலர் இறந்துள்ளனர்.

இதேவேளை சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடுமையான வயிற்றோட்ட நோய் பரவி வருகின்றது.

அசுத்தநீர், அழுகும் பிணங்களின் மத்தியில்வாழ்க்கை, உணவின்மை காரணமாக அங்கு சுமார் 80 லட்சம் பேருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது.

## 'பாம் போஷா' தயாரிப்பு

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் கௌபி, பயறு போன்ற சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

இதன் அறுவடை முடிந்ததும் அதன் உற்பத்திப் பொருள்களில் இருந்து ""பாம் போஷா"" சத்துணவு தயாரிக்கப் படவுள்ளது. (17)

## ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்களை
## மீண்டும் நியமிக்க அனுமதி இல்லை

யாழ் சுகாதாரத் திணைக்களத்தில் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட எழுதுவினைஞர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் கடமையாற்ற திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அனுமதி வழங்கவில்லை.

இதனால் போதியளவு அனுபவம் வாய்ந்த எழுதுவினைஞர்கள் இல்லாமையினால் அலுவலக வேலைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சுயவிருப்பத்தின் பேரில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள எட்டு பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகளுக்கும் மற்றும் மருந்துக் கலவையாளர்களுக்கும் 18-3-91ஆம் திகதியிலிருந்து ஆறுமாதகாலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு மேலிடத்தினால் அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (13)

## வறிய போராளிகளின் குடும்பங்களுக்கு
## விவசாயம் செய்யக் காணி பகிர்ந்தளிப்பு

பூநகரியில் கரியாலை நாகபடுவான் குளநீர்ப்பாசனத் திட்டத்தில் இறுபோக உற்பத்தியினை மேற்கொள்வதற்கு முழங்காவில் பகுதியினைச்சேர்ந்த இறுபோக உரிமையற்ற வறிய 10 போராளிகளின் குடும்பங்களுக்கு 10 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது.

கரியாலை நாகபடுவான் குளநீர்ப்பாசனத் திட்டத்தில் இறுபோகம் மேற்கொள்ள உரிமையுள்ள விவசாயிகளினால் இந்த விவசாயக் காணிகள் போராளிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ப-35)

## மீண்டும் வாழ்க்கைச் செலவுப்படி;
## பல தொழிற்சங்கங்கள் அரசை வற்புறுத்துகின்றன

அரச ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்துடன் மீண்டும் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்படி வழங்கப்படவேண்டுமெனப் பல தொழிற்சங்கங்கள் அரசைக் கோரியுள்ளன.

முன்னர் வழங்கப்பட்ட இப்படியை நிறுத்தியதன் மூலம் அரசு கடந்த ஏப்ரல் மாதம் வரை ஒவ்வொரு அரச ஊழியரிடமிருந்தும் சராசரி 11,878 ரூபாவைப் பெற்றுள்ளதெனவும் இதனால் மொத்தம் 15 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் அரசுக்கு மிச்சம் ஏற்பட்டுள்ளதெனவும் இத் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஒரு புள்ளிக்கு இரண்டு ரூபா என்ற அடிப்படையிலான வாழ்க்கைச் செலவுப்படியை மீண்டும் வழங்க வேண்டுமெனவும்- அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க இது மிக அவசியமெனவும் இத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

## ஆளடையாள அட்டைகளைப் பெற-யாழ்
## செயலகம் மூலமே விண்ணப்பிக்கவேண்டும்

யாழ் குடாநாட்டிலிருந்து அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பஞ் செய்பவர்கள், தங்கள் விண்ணப்பங்களை நேரடியாகக் கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பாது தத்தமது பகுதி உதவி அரச அதிபர்கள் மூலம் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி அங்கிருந்தே அவை கொழும்புக்கு அனுப்பப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கிருந்து நேரடியாகக் கொழும்புக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் மீண்டும் விண்ணப்பதாரிகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டதோடு, அவற்றை உரிய முறையில் செயலகத்தின் மூலம் அனுப்புமாறும் கொழும்புத் திணைக்களம் கேட்டுள்ளது. (47)

## பாஷையூரில்
## 'கண்டி அரசன்'

"கண்டி அரசன்" சரித்திர நாடகம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்குப் பாஷையூர் ஆசிரியர் செபஸ்ரியன் அருந்தமிழ் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதே அரங்கில் இன்றிரவு பாஷையூர் உதயதாரகை நாடக மன்றம் வழங்கும் "கால தேவனின் கடுந்தவம்" என்னும் போர்க்கால இசை நாடகமும் இடம்பெறவுள்ளது. (52)

## சிறந்த சிறுதானிய விதைகளை
## உற்பத்தி செய்ய விசேட திட்டம்

சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தரமான குரக்கன், பயற்று விதைகளை வழங்குவதற்காக தொல்புரம் கமநலச் சேவை நிலையப்பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் குரக்கன், பயறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் தொல்புரம் கமநலச்சேவை நிலைய பகுதியைச் சேர்ந்த பண்ணாகம், தொட்டிலடி, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு ஆகிய நான்கு இடங்களில் சிறப்பு விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலம் இந்தப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவர்கள் உற்பத்தி செய்யும் விதைகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை விவசாயத் திணைக்களம் விலை கொடுத்து வாங்கி வைத்திருந்து அடுத்த போகத்தில் சிறு தானியச் செய்கையை மேற்கொள்வோருக்கு வழங்கவுள்ளது. (13)

# சின்னமடுவில் சிக்கியுள்ளோர் தகவல்கள் பெறமுடியவில்லை

கடந்த மாதம் 27 ஆம் திகதி இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர முடியாது மடையினரிடம் சிக்கியுள்ள பல குடும்பங்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாது இருப்பதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையுடன் உறவினர்கள் தொடர்புகொண்டுள்ளபோதிலும், இதுவரை எதுவித தகவல்களையும் பெற முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சின்னமடுவில் ரீ. சரஸ்வதி (51, சிறிமாவோ) என்பவரது வீட்டில் நாரந்தனையில் இருந்து இடம்பெயர்ந்து தங்கியிருந்த என். யோசப் (71), திருமதி பிலோமினா யோசப் (61), ஜே.வி. இம்மனுவேல் (58, மரண விசாரணை அதிகாரி), திருமதி றீற்றா இம்மனுவேல் (51) ஆகியோருக்கு என்ன நடந்தது என்பதை அறிய எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை எனவும் தெரிய வருகிறது.

முதலில் கிடைத்த தகவலின் படி அந்த வீட்டில் இராணுவம் தங்கியிருப்பதாகவும், சரஸ்வதிக்கு சொந்தமான வாகனங்களை அவர்கள் உபயோகிப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த வீட்டில் பல இடங்களில் இரத்தக்கறை படிந்திருப்பதாகவும், வீட்டுப் பொருள்களைக் காணவில்லை எனவும்; ஜன்னல், கதவுகளும் அகற்றப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் கருவில் இருந்து வந்த யோசப்பின் மகள் ஜொய்சி தெரிவித்துள்ளார். (16)

## மிதிவெடியில் காயம்

மிதிவெடியில் சிக்கிய சிறுவன் ஒருவன் காயமடைந்து நேற்று பகல் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

இச் சிறுவன் கல்லுண்டாய் வெளிப்பகுதியில் விறகு எடுக்கச் சென்ற சமயமே இவ்மிதிவெடியில் சிக்கியதாகவும் இச்சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த க.ஜேந்திரன் வயது 11. (74)

## பங்களாதேஷில் மீண்டும் புயல் 80 பேர் பலி; ஆயிரம் பேர் காயம்

பங்களாதேஷில் மீண்டும் புயல் காற்று அடித்துள்ளது. நேற்று முன்தினம் வீசிய இக் காற்றினால் ஏற்கனவே புயலாலும் வெள்ளத்தாலும் பாதிப்படைந்திருந்த பங்களாதேஷ் மேலும் பல அழிவுகளைக் கண்டுள்ளது.

மீண்டும் வீசிய புயல் மணிக்கு நூறு மைலோ மீற்றர் வேகத்தில் வீசியதாகவும் இதனால் 80 பேர் பலியாகினர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

புயலால் அழிவுற்று இருக்கும் இந்நாட்டுக்கு இருபத்தொரு நாடுகள் இருபது கோடி டொலர் உதவி வழங்க முன்வந்துள்ளன.

## சுகாதாரப் பணிப்பாளருடன் தொழிற் சங்கம் சந்திப்பு

அரசாங்க சுகாதார சேவை யாழ் தொழிற் சங்கத் தூதுக்குழுவொன்று அண்மையில் யாழ் கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதி ஐ நாகமுத்தன் தலைமையில் யாழ் சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் டாக்டர் என். கனகசபையைச் சந்தித்து சிற்றூழியர்களின் குறைபாடுகள் தேவைகள் பற்றிக் கலந்துரையாடியது

இவ் ஊழியர்களின் குறைபாடுகளைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். 15

## பாடசாலைகள் ஆரம்பம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் 2ஆம் தவணைக்காக நேற்று திறக்கப்பட்டன.

20ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் க. பொ. த உயர்தர பரீட்சைகள் இடைநிறுத்தப் பட்டதை அடுத்தே நேற்று பாடசாலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதே வேளை வேலணைக் கோட்டப் பாடசாலைகளுக்கான வகுப்புக்கள் நாளை மறு தினமே ஆரம்பமாகும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன 70

## இராசவீதியில் தோட்டங்களில் கசிப்பு கைப்பற்றப்பட்டது

கல்வியங்காடு இராசவீதியில் உள்ள கணேசபுரத்தில் நேற்று மாலை முதல் இரவு வரை கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது தோட்டங்களில் மறைத்து வைத்திருந்த கசிப்பு உற்பத்திக்குரிய பொருள்களும் (கோட்டா) உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனுடன் தொடர்புடையவர்கள தலைமறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் இருபாலை பிரதேசப் பகுதியினரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (33)

## கேயர் ஸ்தாபனம் உதவி

அகில உலக கெயர் ஸ்தாபனம் புலோலி மேற்கு ஐக்கிய நாணய கடன் சேமிப்புச் சங்கத்திற்கு நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

இச் சங்கம் இப்பகுதி விவசாயிகளுக்கு குறைந்த கட்டண அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்களை வாடகைக்கு கொடுத்து உதவுகிறது. 38

## பனை மரம் ஏறிச் சாதனை

தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்த தொழிலாளர்களுக்கான போட்டி நிகழ்ச்சியான பனை ஏறும் போட்டியில் சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் சங்க ரீதியில் நடாத்திய போட்டியில் தி. அருமைத்துரை என்னும் தொழிலாளி 45 அடி உயரமான பனை மரத்தைப் 15 வினாடிகளில் ஏறி இறங்கிச் சாதனை புரிந்துள்ளார். 36

## மனித முகத்துடன் ஆட்டுக்குட்டி

கொடிகாமம் தெற்குப் பகுதியில் ஆடு ஒன்று மனித முகம் கொண்ட குட்டி ஒன்றை ஈன்றது.

இப் பகுதியிலுள்ள குழந்தையன் உருத்திரன் என்பவருக்குச் சொந்தமான ஆடு ஈன்ற மனித முக ஆட்டுக்குட்டி சுமார் மூன்று மணித்தியாலம் மட்டும் உயிர் வாழ்ந்தது. அதன்பின் மரணமானது. 50

## கட்அவுட் வீழ்ந்து ஒருவர் பலி

தமிழ் நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்துக்கென அமைக்கப்பட்டிருந்த அரசியல் தலைவர் ஒருவரின் பிரமாண்டமான "கட்அவுட்" திடீரென விழ்ந்ததில் ஒருவர் பலியானார் ஐவர் காயமடைந்தனர்.

## வடமராட்சிப் பகுதியில் விசர் நாய்களின் தொல்லை

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து பொதுமக்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ் கட்டாக்காலி நாய்கள் விசர் பிடித்து அலைந்து திரிவதனால் மக்களும், கால் நடைகளும் விசர் நாய்களின் கடிகளுக்கு இலக்காக வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

நாய்களினால் கடியுண்டோருக்கான தடுப்பு ஊசி மருந்து வகைகளும் இப்பகுதிகளில் கிடைப்பதில்லை.

கடந்த வாரம் வதிரிப்பகுதியில் விசர் நாயொன்று ஒரே நாளில் 40 ஆடுகளைக் கடித்துக் காயப்படுத்தியுள்ளதாக வடமராட்சி கால்நடை வைத்தியஅதிகாரி அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. 15

## மீன் உண்ட குழந்தைகள் மரணம் ஆறுபேர் ஆபத்தான நிலையில்

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு குடத்தனை மணற்காட்டுப்பகுதி "அறக்குவா" இன மீனை உட்கொண்டதால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் பரிதாப மரணம் அடைந்ததுடன், அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மேரி சுஜாதா (வயது 7), அன்ரன் ரெயின் (வயது 5) ஆகிய பாலகர்கள் உயிரிழந்தனர் தாய், தந்தை உட்பட மேலும் இவர்களது நான்கு குழந்தைகளும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் இக்குடும்பத்தை சேர்ந்தவர்கள் சாப்பிட்ட மீனில் நச்சுத் தன்மை கூடுதலாக காணப்பட்டமையே என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எஸ். அல்போன்ஸ் 35, எ. வின்சன் பெனடிக் 10, எ. அன்போன்ஸ் வின்சன் 9 ஜோசப் 11, எ. மேரி சுபீதா 1, எ. மேரிவிக்ரோரியா 34 ஆகியோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் கூறின. 74

## முல்லைத்தீவு கச்சேரியில் ஊழியர் பற்றாக்குறை

முல்லைத்திவு அரசாங்க அலுவலகங்களில் ஏற்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிரப்பப்படாததால் வேலைப் பளுக்கள் அதிகரிக்கின்றன.

சுயவிருப்பத்தில் பல உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றதையடுத்து வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் அவர்கள் கவனித்து வந்த கடமைகளைத் தற்போது பணிபுரிபவர்களே கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையால் மக்கள் தமது தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாகத் தெரியவருகிறது.

## அகதிகளுக்கு அரிசி விநியோகம்

வியாபாரிமூலை விநாயகர் தருமநிதியம் இடம்பெயர்ந்துள்ள தீவுப்பகுதி மக்களுக்கு விநியோகிப்பதற்கென 1,00,000 (ஒரு இலட்சம்) ரூபா பெறுமதியான அரிசி மூடைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## வீர மரணம்

திருமலையில் நடைபெற்ற வெடிவிபத்தில் லெப். ஜனகன் (தம்பலகாமம்) வீர மரணம் அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். 71

## நியமனம்

வடமராட்சிப் பகுதி விவசாயப்பதிவாளராகப் பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திருமதி சகுந்தலை பாலச்சந்திரன் (புலோலி) மேலதிக மாவட்டப் பதிவாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### காங்கிரசுக்கே—

மெர்வின் டி.சில்வா நடாத்திய இக்கருத்துக்கணிப்பின் படி இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 42 சதவீதமான ஆதரவும். சந்திரசேகரின் சமாஜ்வாதி ஜனதாவுக்கு 26 சதவீதமும், வி. பி. சிங்கின் ஜனதாதள் இற்கு 17 சதவீதமும் பாரதிய ஜனதாவுக்கு 11 சதவீதமும் ஆதரவு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 48

### கொழும்பு...

வர முடியாத பயணிகள் பலர் வவுனியாவில் தங்கி நிற்பதாகவும் சிலர் உடனேயே கொழும்பு திரும்புவதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

வவுனியா சம்பவங்களை யடுத்து யாழ்தேவி ரயிலில் குறைந்த பயணிகள் வருவதாகவும், வவுனியாவிலிருந்து ஒரு சிலபேரே செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

### மடு...

கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில நடைபெறும் பேச்சு வார்த்தையின் முடிவிலேயே உணவுப் பொருள்களை அனுப்புவது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

அண்மையில் விசேடமாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவுடனேயே இப் பேச்சு வார்த்தை நடைபெறும்.

இப்பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்படுமானால் மடு அகதிமுகாமில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றுமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 70

### ஆறுகள்—

தார்.

வவுனியா விலிருந்து பயணத்தை ஆரம்பித்து மூன்று நாளுக்குப் பின்னரே இவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். 70

### ஸ்ரீலங்கா...

கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது

இதே வேளை வவுனியா சம்பவத்தில் காயமடைந்து கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த பிரெஞ் டொக்ரரையும் இரு தாதிகளையும் பிரான்ஸ் அரசு திருப்பி அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது'

அரசினால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவின் விவர அறிக்கையைப் பொறுத்தே தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ள மேற்படி வைத்திய குழுவின் நடமாடும் வைத்திய சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எம். எஸ். எப் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### உன்ளூர்...

விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோல பனை அபிவிருத்திச்சபையின் மாவிசந்தியிலுள்ள விற்பனை நிலையத்தில் பதநீர் (கருப்பநீர்) விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒரு போத்தல் 10 ரூபா வீதம் விற்பனைசெய்யப்படும் இப்பதநீரை பலரும் விரும்பி வாங்கி அருந்தி வருகின்றனர். 50

### வவுனியாவில்...

னர் கொலைப்பட்டதாக அரசதரப்பில் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை படையினருக்கு உதவியாக காலை முதல் மாலை வரை 2 பொம்மர்கள் 2 அவ்ரோ, 2 ஹெலி ஒருவை-12 என்பன தொடர்ச்சியாக நூற்றுக்கு மேற்பட்ட குண்டுத் தாக்குதலையும், 50 கிபீர் தாக்குதலையும் நடாத்தின.

இதில் புலிகள் தரப்பில் மனோச் (யாழ்ப்பாணம்) வீர மரணத்தை தழுவிக் கொண்டார். இராணுவத்தினர் தற்போது மாதர்பணிக்கர்மகிழங்குளத்தில் உள்ள கூட்டுறவுக் கடையில் நிலைகொண்டுள்ளனர். 71

### தென்னிலங்கை...

ளௌது.

ஜே. வி. பி. சந்தேக நபர்கள் பலர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டமை தெரிந்ததே. (48)

### மன்னாரிலும்—

டத்தின் குறிப்பிட்ட இல பகுதிகளிலும் ஊரடங்கு தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷர்ஸ், (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மி' பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 11-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.